# பலிபீடம்*



இராஜகிரகம். பிம்பிசாரன் அரசாண்ட காலம். அரண்மனையின் யாகசாலையை நோக்கி விரைந்து கொண்டிருந்தார் புத்தர். அவர் உள்ளம் துன்பச் சுமைக்குள்ளே சிக்கித் தவித்தது. பிணி, மூப்பு, சாக்காடு முதலிய மனித துன்பங்களை அறியாது, அலங்காரமான மாளிகையில், உல்லாசமான மஞ்சத்தில், அழகே உருவான யசோதையுடன் இல்லற இன்பத்தில் திளைத்துக் கிடந்தார் சித்தார்த்தர். மனித ஆசாபாசங்களிலிருந்து விழிப்படைந்து,

தன் அரச போகத்தை வெறுத்து, அழகிய மனையாள் என்ற பாசவலையிலிருந்து விடுபட்டு, தன் அன்பு மகனென்ற செல்வத்தைத் துறந்து, உண்மையின் அடித் தளத்தை அறிய வேண்டுமென்ற வெறியுடன் வைகாசி பௌர்ணமி நடுநிசியில் புறப்பட்ட பொழுதுகூட, அந்த ஞானமணியின் உள்ளத்தில் இவ்வளவு சோகம் கவிந் திருந்தது கிடையாது. அவர் உள்ளம் குமுறியது.

மக்களை அறவழியில் அழைத்துச் செல்ல வேண்டிய மன்னன், சுவர்க்கத்தையடையும் குறுக்கு வழியென்ற நம்பிக்கையில், அன்பு மார்க்கத்திலிருந்து தவறி, ஓர் ஆட்டுக் குட்டியை யாகசாலையிற் பலியிடப் போகின்றான் என்று செய்தி புத்தரின் உள்ளத்தை உலுக்கிவிட்டது. அந்த அற்பப் பிராணியின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று அவர் நெஞ்சம் உறுதி பூண்டது. புத்த கயாவில், வைகாசிப் பௌர்ணமி தினத்தில், போதி மரத்தடியில் உட்கார்ந்து, 'என் உடல் எலும்புக் கூடாக மாறினாலுஞ் சரி; அது உலர்ந்தே போனாலும் சரி; ஊழிக் கணக்கான காலம் கழியினும், ஞான ஒளியைப் பெறாது என் உடல் இந்த இடத்தை விட்டுப் பெயராது' என்று நினைத்த பொழுது அவர் உள்ளத்திலிருந்த உறுதியைப் பார்க்கிலும், இது பல மடங்கு உறுதியாகவிருந்தது!

யாகசாலையின் பலிபீடத்தில் நின்றது, அந்த ஆட்டுக்குட்டி! அதன் நெற்றியிற் குங்குமத் திலகம். அதன் கழுத்தில் மலர்மாலை. யாககுண்டத்தில் தீ வளர்க்கப் பட்டிருந்தது. அந்த அக்கினி நாக்கு, ஆட்டுக் குட்டியின் சோகக் கதையைச் சொல்வது போலிருந்தது. ஆனால், ஆட்டுக்குட்டியோ தனக்கு வரவிருக்கும் துன்பத்தைப் பற்றி ஒன்றுமே அறியவில்லை. கடந்த சில நாட்களாகப் புரோகி தர்கள் காட்டிவந்த அன்பில் அது தன்னையே மறந்து

விட்டது. அன்று வாழ்விலொரு திருநாளாகப்பட்டது. பயமறியாது வேடிக்கை பார்த்து நின்றது அது. அதனை வளைத்து நின்ற புரோகிதர்கள் மந்திரம் ஓதினார்கள். பிரதான புரோகிதன், நிஷ்டையில் ஆழ்ந்தவனாகக் காணப் பட்டான். அவனுடைய கைகளில் ஒரு பெரிய கூரிய கத்தி. அந்தக் கத்தி, சாவின் தூதுவன். எந்த நேரத்திலும் ஆட்டின் உயிரைக் குடிக்கக் காத்துக் கிடந்தது. பிம்பிசாரன் மகிழ்ச்சியுடன் யாகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான். அந்தக் கோரக் காட்சியைக் கண்டதும் பகவான் புத்தரின் கண்களில் நீர் சுரந்தது.

"அரசே!" புரோகிதர்கள் மந்திரம் ஓதுவதை நிறுத்தி னார்கள். இராஜகுருவின் உடல் நடுங்கிற்று. பிம்பிசாரன் திரும்பிப் பார்த்தான்.

"இந்த அற்ப ஆட்டுக்குட்டியைப் பலியிடுவதால் உங்களுக்குச் சுவர்க்கம் கிடைப்பது உண்மையானால், அறிவுள்ள பிராணியான என்னைப் பலியிடுவதினால், அந்தச் சுவர்க்க வாழ்வு பன்மடங்கு கிடைக்கும் என்பது நிச்சயமன்றோ? அந்த ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக என்னையே பலியிடுங்கள்!" மௌனம். தீச்சுவாலை தணிந்தது.

புத்தர் பலிபீடத்திற்குச் சென்றார். ஆட்டுக்குட்டி கருணை வள்ளலின் தோள்களில் தாவிற்று. அந்தப் பலிக் காட்சியைப் பார்க்கக் கூடி நின்றவர்கள் எல்லோரும் வெட்கித்தலை குனிந்தார்கள். புத்தனால் பலிபீடம் புனிதமானது. அன்பு வளர்ந்தது. அறம் தழைத்தது.

**அ**நுராதபுரம் ஜெகஜோதியாக விளங்கிற்று. புத்தரின் அவதாரம், ஞான உதயம், மகாபரி நிர்வாணம் ஆகிய

அதிசயங்களினால் மும்முறை ஆசீர்வதிக்கப்பட்ட புனித தினத்தில் இருபத்தைந்தாம் நூற்றாண்டு நிறைவுவிழா; ஸ்ரீ சம்புத்த ஜயந்தி; வைகாசி விசாகம் எல்லாம்.

அந்தப் பிரதான நகரம் இன்ப வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. மதுக்கடைகள் பூட்டப்பட்டுக் கிடந்தன. இறைச்சி, மீன், முட்டை முதலியவற்றையும் அரசாங்கம் விதித்திருந்த தடை உத்தரவினால், உணவகங்கள்கூட மூடப்பட்டிருந்தன. உயிர்வதையென்ற பேச்சுக்கே இடமில்லை.

பல்லாயிரக் கணக்கான மக்கள் வெண்ணுடை தரிசித்து, 'சீலம்' அனுஷ்டித்து, மகாமேகத் தோட்டத்தி லிருந்த புத்தர் சிலையை நோக்கி ஊர்வலமாகச் சென்றார்கள்.

ஆயிரக் கணக்கான புத்த பிக்குகள் 'பிரித்' ஓதினார்கள். 'புத்தம், சரணம், கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி...' இந்த உயிர்த்துடிப்புள்ள கோஷம் வானைப் பிளந்தது; புத்தரின் புகழ் வானமுகட்டை முட்டியது.

ஆயிரம் ஆயிரம் மக்கள் புத்தர் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செய்தார்கள். பல்லாயிரம் மலர்கள் புத்தரின் பாதங்களிற் காணிக்கையாகக் குவிந்து கிடந்தன.

உயிருள்ள மலர்கள் வாடின. அவை தாங்கள் பலியாகும் சோகக் கதையைப் புத்தருக்குச் சொல்லிக் கொண்டிருந்தன. பலிபீடத்தைப் புனிதமாக்கிய புத்தரின் பாதங்களே பலீபீடமாக்கப்பட்டது...

புத்தரின் சிலையின்கீழே நீள் தியானத்தில் ஆழ்ந்திருந்த பிக்கு விழி அலர்ந்தார். வெளியே வந்தார். காத்திருந்தவர்கள் பிக்குவை வணங்கினார்கள்.

"எல்லாம் ஏற்பாடாகி உள்ளது. கைதிகளுடன் கைதியாக நீங்கள் கலந்து கொள்ளலாம். தமிழ்ப் பயங்கர வாதிகள் அடைக்கப்பட்டிருக்கும் பகுதிக்குச் செல்லுங்கள். 'நான் தூக்கிலிடப்பட்டாலும், என் விழிகளை ஒரு தமிழனுக்குத் தானம் செய்யுங்கள். அந்த விழிகள் மூலம் தமிழ் ஈழத்தைப் பார்ப்பேன்' என்று வீர வசனம் பேசினானே ஒரு பறைத் தமிழன். அவனுடைய விழிகளைப் பிடுங்கி எறிந்த பிறகே, அவனைக் கொலை செய்யுங்கள். அப்பொழுது தான் ஆரிய பௌத்த சிங்கள இனத்தின் கௌரவம் காப்பாற்றப்படும்..."

கூடி நின்றவர் கலைந்தனர்.

பிக்கு மீண்டும் தியான மண்டபத்திற்குச் சென்றார்.

புத்தரின் சிலையைப் பார்த்தார்.

ஆட்டுக்குட்டியைத் தோளிலே சுமந்த புத்தரின் நினைவுகள் கனவாய்ப் பழங்கதையாய்...

ஆரிய பௌத்த சிங்கள இனத்தின் கௌரவத்தினைக் காப்பாற்ற, புத்தரின் அருளாசியை வேண்டி, மீண்டும் பிக்கு தியானத்தில் ஈடுபடலானார்.